DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No.60/2018**

**(CNR.No: TNTH06-000072-2018)**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலகிருஷ்ணன் | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **PW1** | |

---

நாள் :01.09.2023

**குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஐடிஐ படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் எலக்ட்ரிசியன் வேலை செய்து வருகிறேன். வழக்குரை சொத்தின் பழைய சர்வே எண். 321 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 321ல் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 28 செண்ட் என்றால் சரிதான். அந்த சர்வே எண்ணில் எனது பாட்டி பேச்சியம்மாள் முன்பாகஸ்தியரான ராமசாமி என்ற வகையறாவினரிடம் வாசாஆ 1 ஆவணம் மூலம் கிழமேல் 32 அடி, தென்வடல் 38 அடி அளவில் தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி ராமசாமி பிள்ளையிடம் எனது பாட்டி கிரையம் பெற்ற நிலத்திற்கான முன் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) எனது பாட்டி பேச்சியம்மாள் தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்று காட்டக்கூடிய வருவாய் ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பாட்டி பேச்சியம்மாள் தனது 3 ஆண் மக்களுக்கும் தாவா சொத்தை தானம் கொடுத்தற்கான தான செட்டில் மெண்ட் பத்திரங்கள் வாசாஆ 2,3,4 ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ 2,3,4 ஆவணங்களில் தாவா சொத்தின் தென்வடல் 35 அடி என்று கூறப்பட்டுள்ளது

என்றால் சரிதான். தென்வடல் 3 அடி அகலம் குறைவாக இருப்பதற்கு காரணமாக தெருவின் அகலம் குறைவாக இருப்பதால் 35 அடி எழுதிக்கொடுப்பதாக எனது பாட்டி கூறியுள்ளதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

3) மேற்படி விபரங்கள் வாசாஆ 2,3,4 ஆவணங்களில் காணப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ 2 ஆவணத்தின் அடிப்படையில் எனது பாட்டி பேச்சியம்மாளும், எனது பெரியப்பா குருசாமிபிள்ளையின் மனைவி மற்றும் மக்களும் சேர்ந்து வாசாஆ 5 ஆவணத்தின் மூலம் செல்லமணி என்பவருக்கு கிரையம் கொடுத்துதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். பேச்சியம்மாள் தாவா சொத்தை வாசாஆ 5 ஆவணத்தின் மூலம் கிரையம் கொடுக்க அவருக்கு உரிமை மூலம் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 5 கிரைய ஆவணத்தின் மூலம் செல்லமணி கிரையம் வாங்கிய சொத்தை அவரிடமிருந்து எனது தகப்பனார் வாசாஆ 6 ஆவணம் மூலமாக தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரையம் வாங்கியதாக கூறுகிறேன் என்றால் சரிதான். வாசாஆ 3 ஆவணம் மூலம் ஆறுமுகத்திற்கு தானமாக கொடுத்து சொத்தையும் வாசாஆ 7 ஆவணம் மூலமாக எனது தகப்பனார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

4) மேற்கண்ட கிரையங்களின் படி வாசாஆ 1 ஆவணத்தில் கண்ட மொத்த விஸ்தீரணமான கிழமேலடி 32, தென்வடலடி 38 என்ற அளவு சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்று கூறுகிறேன் என்றால் சரிதான். ஆனால் எனது நிருபண வாக்குமூலத்தில் பட்டாவின் படி வடபக்கம் கிழமேல் அடி 34.7, தென்பக்கம் கிழமேல் 34 அடியும், தென்வடல் மேற்கு பக்கம் 41.9 அடி, தென்வடல் கிழக்குபக்கம் 44.6 அடி என தாவா சொத்தின் விஸ்தீரணம் இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். பட்டாவில் கண்ட அளவுப்படியான சொத்தைத்தான் எனது வழக்குரையில் 2 வது லக்க சொத்தாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். பத்திரத்தில் ஒரு அளவு, பட்டாவில் ஒரு அளவாக இரண்டு வேறுபட்ட அளவுகளுடன் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் எந்த அளவின் படி பரிகாரம் கோருகிறேன் என்றால் பட்டாவில் கண்ட அளவுகளின் படி பரிகாரம்

கோருகிறேன்.

5) பட்டாவில் உள்ள அளவுகளின் அடிப்படையில் எனக்கு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பட்டாவில் கண்ட அளவுகள் படி என்னிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனது நிரூபணவாக்குமூலத்தில் எனது தகப்பனார் 1வது லக்க சொத்தில் உள்ள மண் சுவரை இடித்து விட்டு மேற்குபக்கத்தில் 5.1/2 அடி இடம் விட்டு, கிழக்குபக்கம் 3 அடி இடம் விட்டும், சுமார் 8 அடி உயரத்திற்கு செங்கல் சுவர் கட்டினார் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கட்டிடம் எந்த வருடம், எந்த மாதத்தில் கட்டப்பட்டது என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் எந்த விபரமும் கூறவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு கட்டிடம் கட்ட எனது தகப்பனார் நகராட்சியில் அனுமதி பெற்றாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்குரை மாதிரி வரைபடத்தில் BE சுவருக்கு மேற்கே 5.1/2x38 அடி இடம் விட்டும், கிழக்கே 3x38 அடி இடம் விட்டும், மற்றும் பட்டாவில் கண்ட அளவுகளின் படி எனது தகப்பானர் அனுபவித்து வந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

6) தாவா 1வது லக்க சொத்து வடக்குப்பக்கம் சிறிதுசந்து விட்டு மண் சுவர் எழுப்பியும், தெற்குபக்கத்தில் மரத்தப்பைகளால் கேட் அமைத்து மாடுகளை அடைத்து வந்தார் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில கூறியுள்ளேன் என்றால் சரிதான். தோராய வரைபடத்தில் ABCHIJ என்ற பகுதியை எனது தகப்பனார் காலியிடமாக விட்டுவைத்திருந்தார் என்று நான் நிரூபண வாக்குமூலத்தில் கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. தோராய வரைபடத்தில் BEFG என்ற பகுதியான 4ம் லக்க சொத்தை மாட்டின் கழிவுகள், சிறுநீர் ரோட்டிற்கு செல்வதற்கு காலியிடமாக வைத்து அனுபவதித்து வந்தார் என்று கூறியுள்ளது பொய்யானது என்றால்சரியல்ல. எனக்கு எனது சகோதரருக்கும் விபத்து ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை செய்து கொண்டதற்கான ஆவணம் ஏதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை, (சாட்சி தனது வலது கையில் இரண்டு விரல்கள் இல்லாததை காட்டி விபத்தில் காயம் ஏற்பட்டதாக கூறுகிறார்).

7) மேற்படி விபத்தின் காரணமாக சிசிக்சையில் இருந்தபோது 4ம் லக்க சொத்தான DEFCD பகுதியை 3x38 அடி நிலத்தை 2ம் பிரதிவாதி ஆக்கிரமித்துக்கொண்டதாக கூறியுள்ள நிலையில் 2ம் பிரதிவாதியைப்பொறுத்து செயல்வலியுத்துக்கட்டளை பரிகாரம் நான் கோரவில்லை என்றால் 2ம் பிரதிவாதிக்கு எதிராக தடையுத்தரவு பரிகாரம் கேட்டுள்ளேன். 01.09.2017 மற்றும் 10.10.2017 தேதிகளில் சர்வேயர் மூலம் தாவா சொத்துகளை அளவீடு செய்ததாக காட்டும் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். அவ்வாறு அளவீடு செய்தபோது 1ம் பிரதிவாதியின் கிழக்குப்பக்க தென்வடல் சுவரை இடித்து அப்புறப்படுத்திவிட்டோம் என்றால் சரியல்ல, எங்களது சொந்த சுவரைத்தான் இடித்தோம். இது சம்பந்தமாக 1ம் பிரதிவாதி எனது தகப்பனார் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சர்வேயர் மூலம் அளவீடு செய்த போது தாவா சொத்தில் 3ம் பிரதிவாதி 3x38 அளவில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தெரியவரவில்லை என்றால் சரியல்ல, இரண்டு முறை அளவீடு செய்தபோதும் பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்ளாததால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன்.

8) 3ம் பிரதிவாதி அவருடைய இடத்தில் தான் 3 அடி அகலம், 8 அடி உயரத்தில் சுவர் எழுப்பி தோராயவரைபடம் FG என்ற பகுதியில் சிறிய கேட் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு தெற்குபக்கம் உள்ள கிழமேல் வீதி கிழக்குப்பக்கமாக சென்று தென்வடல் வீதியில் சேருகிறது என்றால் சரிதான். அவ்வாறு சந்திக்கும் இடத்தில் ரோட்டிற்கு மேற்குபக்கம் சேகர் என்பவரது வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி சேகர் வீட்டை ஒட்டி கிழக்குப்பக்கம் தென்வடல் நகராட்சி கழிவுநீர் கால்வாய் செல்கிறது என்றால் சரிதான். தென்வடல் கழிவுநீர் சாக்கடை மேற்குநோக்கி திரும்பி செல்கிறது என்றால் சரிதான். (சாட்சி திரும்பச்சொல்கிறார் சேகர் வீட்டிற்கு கிழக்கு கழிவுநீர் கால்வாய் உள்ளதா என்று எனக்கு சரியாக தெரியவில்லை). நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யும்போது சேகர் வீட்டிற்கு கிழக்குபக்கம் உள்ள பாதையை கழித்து அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல.

9) அதேபோல் கிழமேல் ரோட்டின் அகலத்தையும் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தென்வடல் மற்றும் கிழமேல் பாதைகளை அளவீடு செய்ததாக நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் அளவுகள் குறிப்பிட்டபடவில்லை என்றால் சரியல்ல. நான் தவறான அளவீடுகளின் அடிப்படையில் பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதனால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதில்லை என்றால் சரியல்ல. அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(ஒ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.